www.Padasalai.Net www.CBSEtips.in

இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

12- வகுப்பு பொதுத் தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 45

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 7×1=7

1. ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம் மௌனம்: மகாமௌனம்- அடிகள் புலப்படுத்துவது
   அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
   இ) நிறைகுடம் நீர்த் தழும்பல் இல் ஈ) புறஅசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
2. வேறுபட்டதைக் குறிப்பிடுக:
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
3. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்
   இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
4. ஆராய்ந்து சொல்கிறவர்
   அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
   இ) தூதுவர் ஈ) உறவினர்
5. சாப விமோசனம், அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
   அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
   இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன
6) தான்மம் பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.
   அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்
   ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
   இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
   ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது
7) பின்வருவனவற்றுள் ஜராவதம் மகாதேவன் பெறாத விருது
   அ) ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது
   ஆ) இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது
   இ) பாரத ரத்னா விருது ஈ) தாமரைத்திரு விருது

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4

8) ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
9) அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?
10) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

பிரிவு - 2

ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக: 1×2=2

11) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
12) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிரிவு - 3

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 5×2=10

13) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க:
புல் - புள

14) கீழ்க்காணும் தொடரில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடருக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக:
நம்முடைய ..... (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

15) கலைச்சொல் தருக:
அ) Sound effect ஆ) Debit card

16) மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:
வழிவழியாக

17) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக:
பால் குடித்தான்.ஆ. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

18) பத்தியைப் படித்து தேவையான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக:
இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

19) காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

20) தொன்மம் - விளக்கம் தருக.

பகுதி - III (பிரிவு - 1)

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

21) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - *இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.*

22) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?

23) சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.

பிரிவு - 2

ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக: 1×4=4

24) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

25) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

பகுதி - IV

ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக: 1×6=6

26) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

27) உங்கள் ஊர்ப்பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

பகுதி - V

அடிபிறழாமல் எழுதுக: 1×4=4

28) 'காய்நெல் அறுத்து' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com